# கிறிஸ்துவின் ஒப்பற்ற மரணம்

அவருடைய மனித வாழ்க்கை சாதாரண மனித வாழ்க்கையைப்போல் இருந்தாலும் அதை அவர் ஒப்பற்ற ஒரு வாழ்க்கையாக வாழ்ந்தார். கன்னிப்பிறப்பு பிறந்தததினாலே அவருடைய பிறப்பு ஒப்பற்றது. அவருடைய மரணம் அதாவது சரீரத்தை விட்டு உயிர் பிரிகிறது என்கிற அடிப்படையில் நம்மைப்போல ஒரு மரணம்தான் என்று சொன்னாலும்கூட அந்த உயிர் பிரிதல் என்பதை அவரே முடிவு செய்து; என் ஆவியை உமது கைகளில் ஒப்புக்கொடுக்கிறேன் என்று அவரே அந்த ஜீவனை விட்டார்; அதை யாரும் எடுத்துக்கொள்ளவில்லை அல்லது அவரை யாரும் கொலைசெய்யவும் இல்லை. இந்த மனுக்குலத்தின் பாவத்திற்காக அவருடைய சரீரத்தை தாமாக முன்வந்து ஒப்புக்கொடுத்தார். அவருடைய மரணம் ஒப்பற்ற மரணமாக இருக்கிறது. பொதுவாக இந்த உலகத்தில் மரணம் என்றால் துார்செய்தியாகத்தான் இருக்கும் ஆனால் ஒரே ஒருவருடைய மரணம் மட்டும் தான் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நற்செய்தியாக அறிவிக்கப்பட்டு வருகிறது அதுதான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மரணம். அவர் வேண்டுமென்றே விரும்பி அந்த மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

## சிலுவை மரணம்

பாபிலோனிய மாமன்னன் கோரேஸ், மேதியனாகிய தரியு இவர்களெல்லாம் சிலுவையை பயன்படுத்திவந்தார்கள். பின்பு கிரேக்க மன்னன் அலெக்சாந்தர் அதன் பிறகு ரோமர்களும் இந்த சிலுவையை கையாண்டார்கள் என்பதை வரலாறு கூறுகிறது. அந்த சிலுவை என்பது கொலைஞரையும் கள்வரையும் ஒரு நொடியில் உயிர் போகாம விடாமல் கொடுந்துயர்க்கு இரையாக்கி துடிதுடித்து உயிர் துறக்க செய்வதே இந்த சிலுவை மரணத்தின் நோக்கமாகும்.

அவர் யூதராயிருந்தார்; யூதமுறைமையின்படி அவருக்கு தண்டனை வழங்கியிருந்தால் கல்லெறிந்து கொல்லப்பட்டிருக்கவேண்டும் ஆனால், அவர் ரோம முறைமையின்படி மரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. என் கைகளையும் கால்களையும் உருவ குத்தினார்கள் (சங்கீதம் 22:16) என்கிற தீர்க்கதரிசனம் நிறைவேறத்தக்கதாக நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் சிலுவையிலே உயிர்நீத்தார். இயேசு கிறிஸ்து எல்லா மனிதர்களுடைய பாவங்களுக்கான விலையை கல்வாரி சிலுவையிலே செலுத்திவிட்டார் ஆனால் அதை புறக்கணிக்கிறவர்கள் அதற்கான தண்டனையை பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை..

## சிலுவை மரணம் என்பது பதில் ஆள் (பதிலீடு) மரணம்

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார், அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து... (ஏசாயா 53:4,5,6,12). அவர்தாமே

தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24).

## சிலுவை மரணம் மீட்பை தருகிறது

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே (1 கொரி 6:20). வாங்குதல் அல்லது கொள்ளப்படுதல் என்பதற்கு கிரேக்க மொழியில் 'அகரெசோ' என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையின் பொருள் ஒரு அடிமையை விலைக்கு வாங்குதல் என்பதாகும். ஏற்கனவே ஒரு இடத்தில் அடிமையாக இருக்கக்கூடிய ஒரு மனிதனை அந்த இடத்திலிருந்து விலை கொடுத்து வாங்குதல் என்பது இதன் பொருளாக இருக்கிறது. கிறிஸ்து நம்மை விடுதலையாக்கி அவருக்கு அடிமையாக வைத்துக்கொள்ளவில்லை மாறாக நாம் அவருக்கு மனப்பூர்வமாக அடிமைகளாக நம்மை அர்ப்பணித்திருக்கிறோம்.

அடிமைச்சந்தையை ஒழித்த ஆப்ரகாம் லிங்கன் ஒருமுறை அடிமைச் சந்தையில் இருந்து விலைக்கு மீட்ட ஒரு பெண்ணை விடுதலையாக்கி உன் விருப்பத்திற்கு ஏற்ற வண்ணமாக செல்லலாம் என்று சொன்னார் ஆனால், அந்தப் பெண்ணோ நான் எங்கும் செல்லவில்லை உமக்கு நான் அடிமையாக இருக்கிறேன் என்று தன்னை அவருக்கு ஒப்புக்கொடுத்தார். இதைத்தான் நாம் செய்கிறோம் கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கி சுயாதீனத்தை கொடுத்திருக்கிறார் நாமோ நம்மை கிறிஸ்துவுக்கு மனப்பூர்வமாக அடிமைகளாக ஒப்புக்கொடுத்திருக்கிறோம். இதற்கு அவர் முற்றிலும் தகுதியானவர் ஏனெனில் அவர் நமக்கு கொடுத்த மீட்பின் கிரயம் பெரியது.

## சிலுவை மரணம் தேவனோடு ஒப்புரவாகுதலை தருகிறது

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1). ஆதி மனிதன் இழந்துபோன தேவனுடைய உறவை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் என்பது இதன் பொருளாகும். 2 கொரி 5:18–20 வரை உள்ள வசனங்களில் தெளிவாக காணலாம்.

## சிலுவை மரணம் நமது பாவ நிவாரணமாக (கிருபாதாரபலியாக) இருக்கிறது.

தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:25, 26). இங்கு தேவநீதி திருப்திப்படுத்தப்பட்டது. தேவன் நீதிள்ளவர் மற்றும் தேவன் பரிசுத்தமுள்ளவர். இந்த பரிசுத்த தேவன் பாவியான மனிதனை ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் அந்தப் பாவத்திற்கான ஒரு கிரயம் செலுத்தப்படவேண்டும். இதையும் அவரே செய்து முடித்துவிட்டார்.

## சிலுவை மரணம் மன்னிப்பை தருகிறது

சரியான கிரயம் இல்லாமல் கர்த்தர் பாவத்தை மன்னிக்கமாட்டார் அல்லது மன்னிக்க முடியாது. பாவத்திற்கான விலை செலுத்தப்படவேண்டும். அவருடைய மரணம் மட்டுமே மனிதர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான கிரயமாக அமைந்தது. ஏனெனில் நாம் ஏற்கனவே பார்த்தவண்ணமாக இயேசுகிறிஸ்துவிடம் இருமைத்தன்மை (இறைவன் + மனிதன்) இருந்ததினால் அவருடைய மரணம் மிகச் சரியான ஒரு விலைக்கிரையமாக இருந்தது. மன்னிப்பு என்ற வார்த்தை கிருபை (அஃபேயேமி) என்கிற கிரேக்க மொழியில் இருந்து வருவதாக ஒரு அறிஞர் கூறுகிறார். அதன் பொருள் 'அனுப்பிவிடுதல்' என்பதாகும்.

- உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்தார் (கொலோ 2:13). எல்லா அக்கிரமங்களும் மன்னிக்கப்பட்டன. கொஞ்சம்கூட மன்னிப்பு பெறாத எந்த பாவமும் நம்மிடம் இல்லை. நம்முடைய எல்லாப்பாவங்களையும் அவர் மன்னிக்க போதுமானவராக இருக்கிறார்.
- எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத்தேயு 6 12) அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும் (யாக்கோபு 5:15)
- நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார் (யோவான் 8:11).

இந்த இடங்களில் 'அஃபேயேமி' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது அதாவது ஒருவன் கடன் பெற்றிருக்கும்போது அந்தக் கடனுக்காக, கடன் பெற்றுக்கொண்டவனை அடிமையாக வைத்துக்கொள்ளலாம் அல்லது நீதிமன்றத்திலே அவனைக் கொண்டுபோய் நிறுத்தி தண்டனை வாங்கி கொடுக்கலாம் ஆனால், அப்படிச் செய்யாமல் 'கடனை திருப்பி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை நான் மன்னித்துவிட்டேன் போ' என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மன்னிப்பைதான் இயேசு கிறிஸ்து நமக்கு கொடுத்திருக்கிறார்.

## சிலுவை மரணம் நம்மை நீதிமானாக்குகிறது

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 5:1). நீதிமானாக்கப்படுதல் என்பதற்கு மூலமொழியில் 'டைக்காயோயோ – Dikaioo' என்று அழைக்கப்படுகிறது. இது இரண்டு விதமாக பயன்படுத்தப்படுகிறது.

1. நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு அகற்றப்படுதல்
2. தேவனுடைய நீதி நம்மீது சுமத்தப்படுதல் (மூடுதல்)

- இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:24). ஆதலால் மனுஷன் நியாயப்பிரமாணத்தின்

கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம் (ரோமர் 3:28).

- இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:9).
- கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்படும்படி... (கலா2:17)

இப்படியாக நம்முடைய கிரியைகளினால் அல்ல கிறிஸ்துவின் நீதி நம்மீது பொழியப்பட்டுள்ளதால்தான் நாம் நீதிமானாக்கப்பட்டுள்ளோம். இதற்கான நீதியான விலையை சிலுவையில் செலுத்தினார்.

## கிறிஸ்துவின் சரீர அடக்கம்

### கிறிஸ்துவின் சரீர அடக்கத்தின் முக்கியத்துவம்

i. மரித்த சரீரத்தைத்தான் அடக்கம் செய்வார்கள். ஆகவே இதில் அவருடைய மரணம் உறுதிசெய்யப்படுகிறது. மேலும் அடக்கம் செய்யப்பட்டால்தான் உயிரோடு எழும்பமுடியும். அப்போதுதான் உயிர்த்தெழுதலின் வல்லமை விளங்கும்.

ii. அடக்கம் பண்ணப்படுதல் சுவிஷேசத்தின் ஒரு சாரமாக இருக்கிறது. கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1 கொரி 15:3,4).

iii. கொலைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ணவேண்டும்; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக (உபா 21:22,23). கிறிஸ்துவின் சரீரம் சிலுவையிலேயே தொங்கப்படுமானால் தேசம் தீட்டுப்படும் ஆகவே, கிறிஸ்துவின் சரீரம் அடக்கம்பண்ணப்பட்டது.

### கிறிஸ்துவின் சரீர அடக்கத்தின் முன்னுரைப்பு (தீர்க்கதரிசனம்)

i. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார் (ஏசாயா 53:9). இந்த காரியங்கள் யோவான் 19:38–42 வரையுள்ள வசனங்களில் நிறைவேறின.

ii. கிறிஸ்துவும் தனது அடக்கம்பண்ணுதலை யோனா தீர்க்கதரிசியின் நிகழ்ச்சியோடு ஒப்பிடுகிறார். யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத் 12:40)

iii. இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். யூதர்கள் சாலமோன் கட்டிய ஆலயத்தைத்தான் குறிப்பிடுகிறார் என நினைத்தார்கள் ஆனால், அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார் (யோவான் 2:19,21).

## கிறிஸ்துவின் சரீர அடக்கத்தின் சித்திரங்கள்

### சர்வாங்க தகனபலி – லேவி 6:10–12

ஆசாரியன் தன் சணல்நூல் அங்கியைத் தரித்து, தன் சணல்நூல் ஜல்லடத்தை அரையில் போட்டுக்கொண்டு, பலிபீடத்தின்மேல் அக்கினியில் எரிந்த சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்துப் பக்கத்தில் கொட்டி, பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய்க் கொட்டக்கடவன். பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்துகொண்டிருக்கவேண்டும்; ஆசாரியன் காலைதோறும் அதின்மேல் எரியும்படி கட்டைகளைப் போட்டு அதின்மேல் சர்வாங்க தகனபலியை வரிசையாக வைத்து, அதின்மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக்கடவன்.

### தீட்டுக்கழிக்கும் ஜலம் (சுத்திகரிப்பின் நீர்) – எண் 19:8,9

அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களை ஜலத்தில் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கக்கடவன், அது இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்துக்கென்று காத்துவைக்கப்படவேண்டும்; அது பாவத்தைப் பரிகரிக்கும்.

இந்த வசனங்களில் பலி மிருகத்தின் சாம்பலை சுத்தமான ஒருவன் சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோய் கொட்டவேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தை யோசேப்பும், நிக்கொதேமுவும் (சுத்தமானவர்கள் – சனகெரிப் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் கிறிஸ்துவின் அந்தரங்க சீஷர்கள்; சமுதாயத்தில் கனம் பெற்றவர்கள்) கொண்டுபோய் ஒருவனும் ஒருக்காலும் வைக்காத புதிய கல்லறையில் (சுத்தமான இடம்) வைத்தார்கள்.

ஆக, தேவன் தன்னுடைய குமாரனுடைய சரீரத்தை எவ்வளவு முக்கியமானதாக கருதினார் என்பது இதில் அடங்கும்.